Source: *Tamil Murasu*, p2
Date: 9 November 2017

கொள்கை ஆய்வுக் கழகம், சிஎன்ஏ இணைந்து நடத்திய ஆய்வின் முடிவு வெளியீடு

‘சீன, மலாய், இந்திய, யுரேஷிய புதிய குடிமக்கள் எளிதில் ஏற்பு’

‘உண்மையான சிங்கப்பூரராக’ இருக்கும் பட்சத்தில் சிங்கப்பூரின் நான்கு முக்கிய இனங்களைச் சேர்ந்த புதிய சிங்கப்பூர் குடிமக்களை சிங்கப்பூரர்கள் பெரும்பாலும் ஏற்றுக்கொள்வதாக கொள்கை ஆய்வுக் கழகமும் (ஐபிஎஸ்) சேனல் நியூஸ் ஏஷியாவும் (சிஎன்ஏ) இணைந்து நடத்திய ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றன. அதே சமயத்தில் கொரிய நாட்டவர், பிலிப்பினோ போன்ற பிற இனங்களை ஏற்றுக்கொள்வதில் சுணக்கம் நிலவுவதையும் அந்த ஆய்வு முடிவு தெரிவிக்கிறது.

இன அடையாளம், இனங்களுக்கு இடையேயான தொடர்பு ஆகியவை குறித்து 2,020 சிங்கப்பூரர்கள், நிரந்தரவாசிகள் ஆகியோரிடம் கடந்த மே மாதம் முதல் ஜூலை மாதம் வரையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டன.

குறிப்பிட்ட இனப் பின்னணியுடைய புதிய சிங்கப்பூர் குடிமக்களை ‘உண்மையான சிங்கப்பூரர்’ எனக் குறிப்பிடுவதை எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ள முடிகிறது என்ற கேள்வி ஆய்வில் கேட்கப்பட்டது.

மலாய், சீனம் அல்லது இந்திய இனத்தவராக இருந்தால் குறைந்தபட்சம் ‘ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ளலாம்’ என்ற பதிலை ஆய்வுக்குட்பட்ட வர்களில் 90 விழுக்காட்டிற்கும் அதிகமானோர் தேர்ந்தெடுத்தனர். 84% விழுக்காட்டினர் இதே பதிலை ‘யுரேஷிய’ புதிய குடிமக்களுக்கும் தேர்ந்தெடுத்திருந்தனர்.

மாறாக, சீனம், மலாய், இந்தியர், மற்றவர்கள் (சிஎம்ஐஓ) என்ற வரையறைக்குட்படாத இனத் தவரை அவ்வாறு வகைப்படுத்தி ஏற்றுக்கொள் வதற்கான சாத்தியம் குறைவு என ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளதாக ஆய்வை வழிநடத் திய முனைவர் மேத்யூ மேத்யூஸ் கூறினார்.

மொத்தம் 20,815 பேருக்கு 2015ஆம் ஆண்டில் சிங்கப்பூர் குடியுரிமை வழங்கப்பட்டது. 15,000க்கும் 25,000க்கும் இடைப்பட்ட அளவில் ஆண்டுதோறும் சிங்கப்பூர் குடியுரிமை வழங்கப்படுகிறது. தேசிய அடையாளத்தை சிங்கப்பூரின் முக்கிய இனக் குழுக்களுடன் இணைப்பதில் ‘சிஎம்ஐஓ’ வரைச்சட்டமும் பங்கு வகிப்பதாக ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

இருப்பினும், பல இன மக்கள் தொகையில் சிங்கப்பூரின் நான்கு முக்கிய இனக் குழுக்களைத் தவிர மற்றவர்கள் நாட்டின் முக்கிய அங்கமாவதில் சிங்கப்பூரர்கள் இணக்கம் கொள்ள வேண்டும் என ஆய்வு முடிவு தெரிவித்தது.

பெரும்பாலான சிங்கப்பூரர்கள் தங்களை இனத்தின் வழியாக அடையாளம் காணப்படு வதைவிட நாட்டின் அடிப்படையில் அடையாளம் காண்கின்றனர் எனவும் அறிக்கை தெரிவித்தது.

ஆய்வுக்குட்பட்டவர்களில் 35 விழுக்காட் டினர் சிங்கப்பூரர்களாகவும் 14.2 விழுக்காட்டி னர் இனத்தின் அடிப்படையிலும் 49 விழுக்காட்டினர் இவ்விரண்டின் கலவையாகவும் தங்களை அடையாளம் கண்டனர்.

இந்த ஆய்வு முடிவுகள் ‘சிஎம்ஐஓ’ வரைச்சட்டத்தை அகற்ற வேண்டும் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று திரு மேத்யூ கூறினார். “சிஎம்ஐஓ மாதிரியின் நோக்கம் மக்களைப் பிரிப்பதல்ல. பல்வேறு குழுக்கள் முறையாக மதிக்கப்பட வேண்டும் என்பதே,” என்றும் அவர் சொன்னார்.

‘சீன இனத்தவருடன் ஜோடி சேர்வதை விரும்பும் பெற்றோர்’

சொந்த இனக் குழுக்களுக்கு அப்பாற்பட்டு இணை தேடும்போது மலாய், இந்திய இனத்தைச் சேர்ந்த சிங்கப்பூரர்கள் தங்களது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் சீன அல்லது வெள்ளை இனத்தவருடன் ஜோடி சேர்வதையே ஊக்குவிப்பதாக இனம் தொடர்பாக ஐபிஎஸ், சிஎன்ஏ மேற்கொண்ட ஆய்வின் முடிவு தெரிவிக்கிறது.

இருப்பினும், சீன இனத்தவர்கள் மலாய், இந்திய இனத்தவரைவிட வெள்ளை இனத்தவருடன் ஜோடி சேர்வதையே விரும்புவதையும் அந்த ஆய்வு சுட்டிக் காட்டியது. 26 முதல் 35 வயதுக்குட்பட்ட இந்தியர்களிடம் அவர்களது பிள்ளைகள் வேறு இனத்தவருடன் ஜோடி சேர்வது பற்றிய கேள்விக்கு 89.3 விழுக்காட்டினர் சீன இனத்தையும் 87.5 விழுக்காட்டினர் வெள்ளை இனத்தவரையும் 75.4 விழுக்காட்டினர் மலாய் இனத்தையும் தெரிவு செய்தனர்.

கலாசாரம் முக்கிய அங்கமாகக் கருதப்படுவதும் பிள்ளைகளை வளர்க்கும் முறையும் இந்தப் போக்குக்குக் காரணமாக இருக்கும் என ஆய்வை வழிநடத்திய முனைவர் மேத்யூஸ் கூறினார்.

கலாசாரங்களுக்கிடையிலான புரிந்துணர்வை இளம் சிங்கப்பூரர் களிடையே அதிகரிப்பதும் இந்த வேறுபாடுகளைக் களைய உதவும் எனவும் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.